ACC. NO. 6434
Koviloor Digital Library



ஸ்ரீ சத்குருவே நம:

சங்கற்ப நிராகரணம்,

6434

இந்நூல்

இராமானந்தசுவாமிகளால்

செய்யப்பட்டது.

இஃது,

திருத்தணிகைக் கந்தசுவாமியையர்

முன்னிலையில்

பாரிப்பாக்கம். வேலுமுதலியாரால்

பரிசோதிக்கப்பட்டு

சென்னபட்டணம்

வாணீ நிகேதனமென்கிற அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

இரௌத்திரி௵ கார்த்திகைமீ

Koviloor Digital Library



Koviloor Digital Library

10-1

உ

கடவுள் துணை.

சங்கற்ப நிராகரணம்,

வரலாறு.

உலகத்தில் வெகுசென்மங்களிலே வருணாசிரமாதிகளுக்கு விகித்தகருமங்களை யனுஷ்ட்டித்து நிஷ்காமியாய் சகலகருமங்களையும் ஈசுவரார்ப்பணம்பண்ணி பரமேசுவரப்பிரசாதத்தினாலே சித்தசுத்தி நித்தியாநித்திய வஸ்துவிவேகம் - இகபரவைராக்கியம் - சமாதிசாதன சம்பன்னளாய் முமுட்சுக்களாய் சற்குருவைக்கண்டு வேதாந்தசிரவணாதிகள் பண்ணுகிற விவேகிகளிடத்திலே சைவம் வைஷ்ணவ முதலிய மதசாஸ்திரங்களிலே பிரவர்த்தித்திருக்கிறவர்கள் வந்து வேதார்த்தங்களைப் பூர்வாபரம் விசாரியாமல் சாஸ்திரவிரோதமா யிருக்கிற துர்யுக்திகளைச்சொல்லி அவர்களுடைய மனதைக் கலங்கப்பண்ணுகிறார்கள். அப்படிக்குக் கலக்கம்வராமலிருப்பதற்கு வேண்டிய பாஷியமுதலான சாஸ்திரங்களை விசாரித்து பரமதவாதிகளுடைய சங்கைகளுக்குச்சமாதா

Koviloor Digital Library

றுஞ்சொல்லி அசற்பாவனுதிகள் வராமலிருக் கும்படி சங்கற்ப நிராகரண மென்னும்இந்தச் சாஸ்திரம் கீர்வாணத்தில் அப்பையதீக்ஷிதரா லே லோகோபகாரமாகச் செய்யப்பட்டிருக் கின்றபடி சிவசிதம்பரசுவாமிகளுடைய சிஷி யராகிய இராமானந்தசுவாமிகளாலே மந்தாதி காரிகளும் எளிதிலுணருமாறு தமிழிற்செய் யப்பட்டிருக்கின்றது.

இந்நூல்மொழிபெயர்த்தற்குக் காரணம்.

இந்தநூல் யாதொருவிக்கினமுமின்றி நி றைவேறும்பொருட்டு தீக்ஷிதருடைய பாதார விந்தங்களை நமஸ்காரம்பண்ணி சிவசிதம்பர சுவாமிகளுடைய பாதபத்மங்களிலே பூஜாநம ஸ்காராதிகளைச்செய்து லோகத்திலே கலியினு டைய விசேஷத்தினுலே வேதசாஸ்திராதி அ ப்பியாசங்களுக்கு லோபம்வந்திருக்கிறபடியி னுலும் துஷ்டாளுந் துர்யுக்தி சொல்லுகிற பேர்களும் அதிகரித்தபடியினுலும் விவேகிக ள்வெகு துர்லபமானபடியினுலும் பாஷியமு தலான சாஸ்திரங்களை அப்பியாசம்பண்ணுவ தற்கு புத்திமான்களல்லாதப் பிராமணுதிகளை க்குறித்துஞ் சன்மாந்திர புண்ணியவிசேஷங்க

Koviloor Digital Library

னிஞலே மோக்ஷத்திலேயிச்சையுண்டாய்ச் சிர வணுதிகள்பண்ணுகிற ஸ்திரீசூத்திராதிகளைக் குறித்துந் தமிழிஞலே சொல்லப்பட்டதாம்.

இந்தக் கிரந்தத்தைச் சிரவணுதிகள் பண்ணுகிறவர்களுக்கு அசற்பாவனுதிகள் வரமாட்டாது பிரமக்கியானந்திருடமாய் ஜீவன்முக்தி வரும்.

இனிபரமதவாதிகளுடைய
சங்கையும்-உத்தரமும்.

க - வது. அகண்டசச்சிதானந்த பரிபூரணமாய் சுவயம்பிரகாசமாயிருக்கிற பிரமத்தினிடத்திலே அந்தகாரவடிவாயிருக்கிற அவித்தையிருக்கிறதென்றுவேதாந்திகள்சொல்லுகிற பக்ஷம் இருட்டிற்கும் பிரகாசத்திற்கும் விரோதமானபடியிஞலேகூடாது. ஆனல் அவித்தை யில்லையென்று சொல்லுவோமென்ருல் அவித்தியாகாரியமான ஆவரணவிக்ஷேபசக்திகள் மறைக்கவுந் தோற்றவுங்கூடாது. அவைகளுமில்லையென்ருல் அப்போது குருவும் வேதசாஸ்திராப்பியாசங்களு மில்லாமலிருக்கவேண்டும். இருக்கட்டுமென்ருல் வேதசாஸ்திரங்களுக்குவியர்த்தம்வருவதுமன்றி வேதாந்தசிரவணுதிகளும் பண்ணுமலிருக்கவேண்டும். பண்

Koviloor Digital Library

னுகிறபடியினாலே வேதாந்திகளுக்கு நியாய ந்தெரியாத மந்தபுத்திகளாக்குமென்கிற சங்கைக்கு.

அக்கியானதசையிலேகாஷ்டத்தில் அக்கினி அடங்கியிருக்கிறதுபோலபிரமத்துக்கும் அவித்தைக்கும்விரோதமில்லாமலிருக்கும். ஆகையால் விக்ஷேபசக்தியும் ஆவரணசக்தியுமுண்டு. அரணிகொண்டுகாஷ்டத்தைக்கடையும்போதுகாஷ்டத்திலிருந்துசலித்தஅக்கினியானதுகாஷ்டமுதலானதுகளை பஸ்மம்பண்ணுகிறதுபோல குருவினாலும் வேதாந்தமகாவாக்கிய சிரவணாதிகளாலும் உண்டாக்கிறஞானம் விக்ஷேபம் ஆவரணமுதலான காரியபிரபஞ்சத்தையும் காரணமான அந்தகாரமாயிருக்கிற அவித்தைமுதலானதுகளையும் நாசம்பண்ணுகிறபடியினாலே பிரமஞானத்துக்கும் அவித்தைக்கும் விரோதமில்லை, அதனாலே ஆவரணம் விக்ஷேபமுதலானதுகளுமிருக்கும் அதனால் குருவும் வேதாந்தசிரவணாதிகளும் பண்ணுகிறதே நியாயமென்பது வேதசாத்திரசித்தாந்தம். ஆதலால் இப்படியிருக்கிற வேதசாஸ்திர மரியாதைகளை யறியாமல் தாறுமாறுமாய்ச் சொல்லுகிறவாள் மூடாளென்றும் அவர்களுக்குச்சமுசாரபந்தம் நிவர்த்திக்கமாட்டாதென்றும்உத்தரம்.

Koviloor Digital Library

உ-வது. வேதசாஸ்திரங்களிலே பிரமத்துக்கும் அவித்தைக்கும் விரோதமில்லையென்கிறது சுழுத்தியினாலே யறியத்தக்கது தமஸாயிருக்கிற அவித்தைக்கும்தேஜோமயமாயிருக்கிற பிரமத்துக்கும் விரோதமில்லை யென்றால் பந்தஹேதுவான அவித்தைமுதலானதுகளுக்கு நாசம்வந்து முத்தியடைகிறதெப்படி யென்கிற சங்கைக்கு

ஆத்துமாதானே பிரதிபிம்ப நியாயமாய் அந்தக்கரணத்திலேகூடி ஆத்மானாத்ம விசாரம்பண்ணி அனாத்மாவாயிருக்கிற சரீரத்திரயங்களுக்கு சாட்சியென்கிறகியானம் வருகிறபோது மாயாகாரியமான சகலநாமரூபப் பிரபஞ்சங்களையும் அதற்குக்காரணமான அவித்தையையும் நாசம்பண்ணி விறகில்லாமலிருக்கிற அக்கினிபோலவும் ஜலத்திலே கலந்ததேற்றாங்கொட்டைபோலவும் விருத்திக்கியானஞ் சொரூபத்திலே அயிக்கியமாய்முத்திவரும்.

இதுவுமல்லாமல் ஆதித்தன்அக்கினிசொரூபமாயிருந்தாலும் அவனாலே கிரகாதிகள் தகிக்கப்படவில்லை சூரியகாந்தக்கல்லென்கிற உபாதியோடேகூடுகிறபோது அக்கினியுண்டாய் சகலபதார்த்தங்களையுந் தகிக்கிறதுபோல ஸ்வரூபக்கியானத்துக்கும் அவித்தைக்கும் விரோத

Koviloor Digital Library

மில்லை, விருத்திக்கியானத்துக்கும் அவித்தைக்கும் விரோதமுண்டென்றும் அதினாலே சகல நாமரூபப் பிரபஞ்சங்களும் மித்தையென்றும் அசத்தியமென்றும் அறியவேண்டுமென்றுத்தரம்.

௬ - வது. சகலபிரபஞ்சங்களு மித்தையானால் வேதங்களுமித்தையல்லவா பொய்யான வேதத்தினாலே அக்கியானநாச மெப்படிவரும் அசத்தியமாயிருக்கிற வேதத்தினாலேசத்தியமாயிருக்கிற மோக்ஷமெப்படிவருமென்கிற சங்கைக்கு

சொற்பனத்திலேபாய்ந்தபுலிசாக்கிறத்திலே விழிக்கப்பண்ணி தானும் பொய்யாகிறாப்போல அக்கியானத்தினாலே தான்வேறென்று நின்ற ஜீவனுடைய அக்கியானத்தை நாசம்பண்ணி ஸ்வரூபக்கியானத்திலே விழிக்கப்பண்ணி வேதமும்பொய்யாய்ப் போகுமென்றுத்தரம்.

௭ - வது. புத்திவிருத்திக்கியானம் அவித்தையைக் கெடுக்குமென்கிறதுகூடாது ஏனென்றால் காரியமாயிருக்கிற விருத்திக்கியானங் காரணமாயிருக்கிற அவித்தையைக் கெடுக்கமாட்டாதென்கிற சங்கைக்கு.

இரும்பின்காரியமான எகு இரும்பைக்

Koviloor Digital Library

கெடுக்கிறதுபோல காரியமான புத்திவிருத்திக்கியானங் காரணமான அவித்தையைக்கெடுக்குமென்றுத்தரம்.

ரு - வது, விதிவத்தாயிருக்கிற சமாதிக்கும் அக்கியானமாயிருக்கிற சுஷுப்திக்கும் விருத்திநாசம் சமமானால் சரீரஞ்சமாதியிலிருக்கவுஃ சுஷுப்தியில்கிடக்கவும் காரணமேதென்கிறசங்கைக்கு

சித்தவிருத்தி விவேகக்கியானத்திலிருந்தபடியினாலே சமாதியிலேசரீரமிருக்கும் அக்கியானத்தில் விருத்தி லயித்தபடியினாலே சுஷுப்தியிலேசரீரங்கிடக்குமென்றுத்தரம்.

சு - வது, தேகேந்திரியங்களெல்லாஞ் சடங்கள் சிதாபாசன் அசத்தியன் சித்தாயிருக்கிற ஆத்மாவிபுஆனபடியினாலே இதுகள்வொன்றையுஞ் சிருஷ்டிக்கப்போகிறதில்லை யாகையால் இந்தமோகாதிகளாயிருக்கிறதொழில்களையார் சிருஷ்டிக்கிறானென்கிற சங்கைக்கு.

அவித்தியாகாரியமென்றுத்தரம்.

எ - வது. மோக்ஷாவஸ்தையிலே சிதாபாசன் நாசமாகிறபடியினாலே சாகானயிருக்கிற புருஷன் தான்சாக மருந்துகுடிப்பானோவென்கிறசங்கைக்கு.

பரலோகத்தை விரும்புகின்ற புண்ணிய

Koviloor Digital Library

புருஷிரள் கங்காபிரவேசம் பறுவதபதனம் ப ண்ணுகிறதுபோல வென்றுத்தரம்.

அ - வது. சரீராதிப்பிரபஞ்சம்ஏதினலே பொய்யாய்ப்போகுமென்கிறசங்கைக்கு

சத்துஇன்னது அசத்துஇன்னதுவென்று விவேகத்தினலேவிசாரித்துசத்ரூபமான ஆத் துமாவைத்தானென்றுஅபரோக்ஷமாயறிந்தால் போமென்றுத்தரம்.

கூ - வது. மோக்ஷமாருக்கென்கிறசங்கை க்கு.

உபயாத்துமாவாயிருக்கிற ஜீவாத்துமாவு க்கென்றுத்தரம்.

ய - வது. சரீரமிருக்கிறமட்டுக்கும் அத்து வைதங்கூடாதென்கிறசங்கைக்கு

நிருபாதிகப்பிராந்தி யல்லாமல் சோபா திகப்பிராந்தியாகையால்கூடுமென்றுத்தரம்.

யக - வது. சுக்தியினிடத்திலேயும் வெ ள்ளியினிடத்திலேயும் வெண்மை ஏகலக்ஷண மா யிருக்கிறபடியினலே சுக்தியினிடத்திலே வெள்ளி விவர்த்தமாய்த்தோற்றலாம் அப்படி பிரமத்துக்கும் பிரபஞ்சத்துக்கும் ஏகலக்ஷண மில்லாதபடியினலே பிரமத்தினுடைய விவர் த்தம் பிரபஞ்சமென்பது எப்படிகூடுமென் கிற சங்கைக்கு.

Koviloor Digital Library

பிரமத்தினுடைய சத்தியத்துவபுத்தி பிராந்தியினலே பிரபஞ்சத்தினிடத்திலே வந்திருக்கிறபடியினலே பிரமத்தினுடைய விவர்த்தப்பிரபஞ்சமென்பது கூடுமென்றுத்தரம்.

௰௨ - வது. எப்படி விஷயத்தை யறியுமிடத்தில் இந்திரியமும் மனசும் சிதாபாசனும் வேண்டுமோ அப்படி பிரமத்தை யறிகிறபோது இந்தமூன்றும்வேண்டும். ஆதலால் பிரமம் கடபடாதிகள்போல வொருவிஷயமாகும் அப்படியறியப்போகாதென்னில் சுசவிஷாணாதிகள்போல சூனியமாமென்கிறசங்கைக்கு.

சர்வத்தையுஞ் சாட்சியாய்ப்பார்க்கிற படியினலே இந்திரியந்தேவையில்லை, சுவயம்பிரகாசமாய்த் தோற்றுவிக்கிறபடியினலே மனந்தேவையில்லை, அறிவே வடிவாயிருக்கையினலே சிதாபாசன்தேவையில்லை, ஆகையால்பிரமக்கியானத்தினலேதானே அனுபவவேத்தியமாய்ப் பிரமத்தையறியவேண்டுமென்றுத்தரம்.

௰௩ - வது. மாயைசுதந்தரையோபராதினையோ வென்கிறசங்கைக்கு.

நிருவிகாரமாயிருக்கிற பிரமசைதன்னியத்தை சீவாதிபிரபஞ்சமாய் தோற்றுவித்தபடியினலே சுதந்தரையும் சத்ரூபசைதன்னியத்துக்கு தான் அன்னியமாய் தனக்குச் சுதலஸத்தை

Koviloor Digital Library

யில்லாதபடியினாலே பாரதீனையுமாமென்றுத்தரம்.

௰௪ - வது. சத்துருக்கு சகத்துருபின்னமோ அபின்னமோ பின்னாபின்னமோ வென்கிறசங்கைக்கு.

அஞ்ஞானதிருஷ்டிக்குபின்னம் ஞானானுபவதிருஷ்டிக்குஅபின்னம் சாஸ்திரதிருஷ்டிக்கு பின்னாபின்னமென்றுத்தரம்.

௰௫ - வது. பிரமம் மாயைக்கு எதினால் ஆதாரமென்கிறசங்கைக்கு.

பிரமம் சத்துரூபமாயிருக்கையினாலென்றுத்தரம்.

௰௬ - வது. மாயையாகப்பார்த்தால் பிரமமில்லை பிரமமாகப்பார்த்தால் மாயையில்லை. இதெப்படியென்கிற சங்கைக்கு.

யானையாகப்பார்த்தால்மரமில்லை மரமாகப்பார்த்தால்யானையில்லை என்றதுபோலவென்றுத்தரம்.

௰௭ - வது. மாயைசடமென்றும் வந்தியாபுத்திரனென்றும் மித்தையென்றுஞ்சொல்லுவதேனென்கிறசங்கைக்கு.

பின்னத்தினாற்சடம் அசத்தியத்தினால்வந்தியாபுத்திரன் அநிர்வசனீயத்தினால்மித்தையென்றுத்தரம்.

Koviloor Digital Library

௰௮ - வது. மாயை-சகம் - சிற்சத்தி-வஸ்து - இந்தநான்குவகையும் - மாயைக்குள்ளே பகுத்தறிகிறதெப்படியென்கிறசங்கைக்கு.

நாமரூபத்தை யுண்டாக்குகின்ற சக்தி மாயை, நாமரூபப்பிரபஞ்சமே சகம், மிருத்திகையிற்கடினசக்தி சிற்சத்தி, உண்டென்கிறதே வஸ்துவென்றுத்தரம்.

௰௯ - வது. பழுதையினிடத்திலே விவர்த்தமாகப் பாம்புதோற்றினது சுபாவமாயிருக்கின்ற பாம்பைக்கண்டவனுபவவாசனை மனதிலே யிருக்கையினாலேவிவர்த்தமாகப்பழுதையினிடத்திலே பாம்புதோற்றலாம்அப்படிபிரபஞ்சம் அனாதியாயும்நித்தியமாயு மிருக்குமென்கிற வாசனைமனதிலே அனுபவமாக யிருந்தல்லவா விவர்த்தமாகத்தோற்றவேண்டுமென்கிற சங்கைக்கு.

வெள்ளியுஞ் சர்ப்பமும்போல அனுபவமூலப்பிராந்தியாகத்தோற்றினதல்லகந்தசர்ப்பநியாயம்போலபரம்பராபிராந்தி அனந்தபரம்பரையென்று தாற்பரியம் இதுமாத்திரமல்லவெல்லங்கசக்கிறதென்கிறதுபோல மனோதருமமென்றுத்தரம்.

௨௰ - வது. காலவேற்றுமையால் பழுதையைப் பாம்பென்று மருண்டு பீதியடைந்

Koviloor Digital Library

நவன் விவேகத்தினல் இது பாம்பல்லபழுதை யென்று கண்டவுடனே பாம்புபொய்யானது போல பிரம விவர்த்தமாயிருக்கின்ற பிரபஞ் சம் பொய்யென்றும் பிரமமே சத்தியமென் றுமறிந்தால்பாம்பு அந்தக்ஷணத்திலே பொய் யானதுபோல பிரபஞ்சமுந்துடைபட்டுப் போகாமற் பிராரத்துவமுள்ள பரியந்தமும்பி ரபஞ்சவிவகாரந் தோற்றுவானேனென்கிறச ங்கைக்கு.

கருமசேஷத்தினலே பிராரத்துவமுள்ள மட்டுக்கும்பிரபஞ்சவிவாகாரந்தோன்றலாம் ஏ னென்ருல் லோபாதி கப்பிராந்தியென்றுத்த ரம்.

உக - வது. ஸ்தாணுவினிடத்திலேபுருஷ ப்பிராந்தியை எதிரிட்டுக்கண்டவன் விவேகத் திறைற் புருஷனல்ல ஸ்தாணுமெய்யென்றறியு மிடத்து ஸ்தாணுவுமெதிரிட்டுக்கண்டவனு நி த்திய மாணுப்போல சிதாபாசன் அக்கியான த சையில் பிரமத்தைத்தானே பிரபஞ்சமாய்க்க ண்டான் விவேகத்திலுல் பிரபஞ்சம்பொய்யெ ன்றும் பிரமமே சத்தியமென்றுங் கண்டானெ ன்னில் காண்பானுங்காட்சியுமுண்டான போ தே அத்துவைதங் கூடாதென்கிற சங்கைக்கு.

சிதாபாசனுக்கு ஆத்துமசத்தைத் தவிர

Koviloor Digital Library

வேறுசத்தில்லை அவித்தியாபிரதிபிம்ப வுபாதிவசத்தினலும் பிராந்தியினலும் தன்னைத்திரிபுடியாகக்கண்டவன் விவேகத்தினலே அவித்தைமுதலான உபாதிகள்நசித்து சச்சிதானந்தமாகத் தன்னைஅனுபவமாய்க்காண்கையால்அத்துவைதங்கூடுமென்றுத்தரம்.

௨௨ - வது. முகத்துக்குக்கண்ணாடி பின்னமாகையால் பிரதிபிம்பந்தோற்றும். பிரமத்துக்கு வித்தையும் அவித்தையும் அபின்னமாகையால் சீவேசுவரர்களுக்குபிர்திபிம்பநியாயங் கூடாதென்கிறசங்கைக்கு.

வியாபகமாயிருக்கிற ஆகாசத்தினிடத்திலே கடஜலம்அபின்னமாகவிருந்தும்பிரதிபிம்பங் கண்டபடியினலேபிரதிபிம்பநியாயங்கூடுமென்றுத்தரம்.

௨௩ - வது. ரூபமாயிருக்கிற சந்திரன் ரூபமாயிருக்கிற ஜலத்திலே பிரதிபிம்பிக்கும். அரூபமாயிருக்கிறபிரமம்ரூபமாயிருக்கிற வித்தையவித்தைகளிலேபிரதிபிம்பியாதென்கிற சங்கைக்கு.

அரூபமாயிருக்கிற ஆகாசம் ரூபமாயிருக்கிறஜலத்திலே பிரதிபிம்பித்துக்காண்கையால் கூடுமென்றுத்தரம்.

௨௪ - வது. ரூபமாயிருக்கிற பிருதிவி

Koviloor Digital Library

உபாதிவசத்தினால்கடாகாரத்தையடையும். அரூபமாயிருக்கிற சித்தினிடத்திலே நாமரூபாத்துமகமாயிருக்கிறப்பிரபஞ்சந் தோற்றுமென்பதெப்படியென்கிறசங்கைக்கு.

மண்ணை நீக்கிப்பார்க்குமிடத்து கடத்துக்குநாமரூபமில்லாததுபோல சத்தாகாரத்தை நீக்கிப்பார்க்குமிடத்துப் பிரபஞ்சத்தினுடைய நாமரூபமும் அரூபமாய்ப் போனபடியினாலே ஆகாசத்திலே நீலபீதாதிகள் தோற்றினாற்போல அரூபமாயிருக்கிற சித்திலேநின்றும் ரூபமாயிருக்கிறப்பிரபஞ்சந் தோற்றுமென்றுத்தரம்.

௨௫- வது. அந்தகாரஅஞ்ஞானவடிவாயும் அவித்தையின்மயமாயுமிருக்கிறசுழுத்தியினிடத்திலேஜீவனையுஞ்சாட்சியையும்பிறித்தறிகின்றதெப்படியென்கிறசங்கைக்கு,

சுகமாய் நித்திரைபோனே னென்றவன் ஜீவன் ஒன்றுமறியேனென்றவறிவு சாக்ஷியென்றுத்தரம்.

௨௬ - வது, ஜீவன்முக்தனுக்கு ஞானவருளுதித்துங் கருமசேஷமானப்பிராரத்துவம் நிற்குமென்னில் துவைதமாகும் பிராரத்துவமில்லையென்றால் வியகாரங்கூடாதென்கிற சங்கைக்கு,

Koviloor Digital Library

சிதாபாசன் நஷ்டமானபடியினாலே அத்வைதமில்லை. தான்சாக்ஷியான படியினாலேவிவகாரம் பிராரத்துவத்தின்படி சேஷ்டித்தாலுந் தனக்கில்லையென்றுத்தரம்.

உஎ - வது. சப்ததன் மாத்திரையாயிருக்கின்ற ஆகாசத்தினின்றும் வாயுவு அக்கினி அப்பு பிருதிவி எப்படி தோற்றக் கூடுமென்கிறசங்கைக்கு,

காரணபூதத்தின் குணம் காரியபூதங்களிலே நிற்கையினாற் கூடுமென்றுத்தரம்.

உஅ - வது. பந்தமாவதேது முத்தியாவதேதென்கிறசங்கைக்கு.

வஸ்துவை யறியேனென்றது பந்தம். தன்னைத்தவிர வேறொன்றுமில்லையென்றது முத்தியென்றுத்தரம்.

உகூ- வது. ஏகசீவவாதஞ்சொல்லுமிடத்து மோக்ஷமடைந்தபேருமில்லை, இனிமேலடையப்போகிறபேருமில்லை, நானசீவவாதஞ் சொல்லுமிடத்துஅத்துவைதங் கூடாதென்கிறசங்கைக்கு,

ஞானதிருஷ்டிக்கு ஏகசீவவாதமும் அஞ்ஞானதிருஷ்டிக்கு நானசீவவாதமுஞ் சுருதி சொல்லுகிற படியினாலே கூடுமென்றுத்தரம்.

௩௰ - வது. பிரமமொன்றேயொழிய வி

Koviloor Digital Library

ரவேட்டில்லையென்னில் துவம்பதசோதனை பண்ணவேண்டுவதில்லை. துவம்பதசோதனைபண்ணியறியவேண்டுமெனில் பிரத்தியேகாத்துமாவாகிய தனக்கு அநுபின்னமாமென்கிற சங்கைக்கு,

அஞ்ஞான திருஷ்டியினாலேசீவரூபியாகிய தனக்குச்செனனமரண முண்டென்றிருக்கிற பிராந்தி அனாதியாய்ச்சத்தியம் போலேவந்திருக்கையால்ஸ்வரூப நிச்சயம்பண்ணவேண்டி துவம்பதசோதனைபண்ணவேண்டியது.ஸ்வரூப நிச்சயம்பிறந்தவிடத்திலே தேகாதிப்பிரபஞ்சமெல்லாந்தன்னுடையவிவர்த்தமாகையினாலே தனக்குப்பின்னமா யொருபதார்த்தமுமில்லையென்றுத்தரம்.

௯௯ - வது. குருவானவர் சராசரமாதி அவயவத்துடனே கூடியிருக்கையினாலே அசரீரி என்கிறதெப்படியென்கிற சங்கைக்கு.

அவர் சித்ரூபாகாரமாகவிருந்தபடியினாலே அசரீரியென்றுத்தரம்.

௯௨-வது. குருவுக்குத்தோற்றமுமொடுக்கமுமில்லை யென்றதெப்படி யென்கிறசங்கைக்கு,

அறிவேதனுவா யிருந்தபடியினாலே அவ்விரண்டுமவருக்கில்லையென்றுத்தரம்.

Koviloor Digital Library

௬௩ - வது. உடலோஉயிரோபுஜிப்பதெ ன்கிறசங்கைக்கு,

அக்கினியின்காரியமானஅபானனுடைய தருமமென்றுத்தரம்.

௬௪-வது. பசியுந்தாகமும்யாருடையதரு மமென்கிறசங்கைக்கு,

பிராணனுடைய தருமமென்றுத்தரம்.

௬௫ - வது. ஸ்வரூபநிச்சயம் பண்ணி னவனுக்குபோக்தவ்வியமேனில்லை யென்கிறச ங்கைக்கு,

தான்சருவசாக்ஷியானபடியினாலே இல்லை யென்றுத்தரம்.

௬௬ - வது. அவித்தையுஞ்சிதாபாசனும் நஷ்டமாய்த்தேகாதிப்பிரபஞ்சமெல்லாந் தன் னுடைய விவர்த்தமாகக்கண்ட ஸ்வரூபஞ்ஞா னிக்குப்பிராரத்துவஞ்சீவிக்கின்றபரியந்தமும் சரீரவிவகாரத்திற்கு நியந்தாருத்துவமில்லாதப டியினாலே நியந்தா ஆரென்கிறசங்கைக்கு.

ஒருக்குக் குடியிருந்தவன் போனபின்பு வீடுடையவன் வீட்டையொப்புக்கொண்டது போல ஈஸ்வரனுந் தம்முடைய காரியசரீரத் தை யொப்புக்கொண்டு நியந்தாவாவனென் றுத்தரம்.

௬௭ - வது. சிதாபாசன் பிரதிபிம்பநியா

Koviloor Digital Library

யனானல் ஐக்கியமாருக்கென்கிற சங்கைக்கு,

கூடஸ்தருக்கு ஐக்கியமென்றுத்தரம்.

௬அ - வது. சித்துக்கோ சிதாபாசனுக்கோ பந்தமுமுக்தியுமென்கிறசங்கைக்கு,

ஸ்வரூபநிச்சயத்தினாலே வியாபகசைதன்னியமாய் ஆத்மஸ்வரூபமாயிருக்கின்ற தனக்கும்பந்தமு முக்தியுமில்லை. அஞ்ஞானதசையிற்கூடஸ்தருடையசத்தையைச் சிதாபாசன் தன்னதாக்கிக்கொண்டுசீவாத்துமபக்ஷமாய்நின்றுதனக்குப்பந்தம்முக்தியுமுண்டென்றுமயங்குமிடத்திற் காலகருமபரிபாகத்தினாலுங் குருகடாக்ஷத்தினாலும்விவேகம்பிறந்துஸ்வரூப நிச்சயம்பண்ணுமிடத்திற் சிதாபாசன்பிரதிபிம்ப நியாயமாய்ப் மித்தையாய்ப் போனபடியினாலே சிவத்துவமாயிருந்த தனக்கும்பந்தமுமுக்தியுமில்லையென்றுத்தரம்.

௬௯ - வது. கடவிஷயஞானத்தில்விருத்திநஷ்டமான பின்கடாகாரத்தை சாக்ஷியறிகிறதுபோலகடோவிருத்தியில்லாதவிடத்து அதுதானேயறியுமல்லவா வென்கிற சங்கைக்கு,

விருத்திக்குமுன்னுஞ் சிதாபாசனில்லாதபடியினாலும்விருத்தியில்லாத கடம்அஞ்ஞானமானபடியினாலும் அஞ்ஞானத்துக்குச்சாக்ஷியல்லாமல்விருத்தியில்லாதகடத்தைச் சாட்சியறி

Koviloor Digital Library

யவேண்டுவதில்லையென்றுத்தரம்.

சய - வது. அவித்தையை வித்தைகெடுக்குமென்றால் வித்தையெதினாற் கெடுமென்கிற சங்கைக்கு,

அந்தகாரத்தைக் கெடுக்கின்ற தீபம் பிரகாசமாகிய சூரியசன்னிதானத்திற் கெடுவதுபோல ஸ்வயஞ்சோதிவடிவாயிருக்கின்ற சுபாவஞானத்தினாற் கெடுமென்றுத்தரம்.

சக - வது. தேகமேதானென்றிருக்கும்போதுஞ் சீவனேதானென்றிருக்கும்போதுஞ் சாட்சியே தானென்றிருக்கும்போதும் பிரமமேதானென்றிருக்கும்போதும் தேகாதிப் பிரபஞ்சமெப்படி யிருக்குமென்கிறசங்கைக்கு,

தேகமேதானென்றிருக்கும்போதுதேகாதிப்பிரபஞ்சம்நித்தியமாயும் சீவனேதானென்றிருக்கும்போது நித்தியாநித்தியமாயும் சாட்சியே தானென்றிருக்கும்போது மித்தையாயும் பிரமமேதானென்றிருக்கும்போதுதன்னைவிடவேறில்லாமலுமிருக்குமென்றுத்தரம்.

சஉ - வது. துவம்பத விலக்ஷணஞானசாக்ஷியே பரிபூரணனாற் சகலவாத்துமாக்களுடையவிருத்தியையு மறியவேண்டுமல்லவாவென்கிற சங்கைக்கு,

சைதன்னிய பரிபூரணனானாலும் உபாதி

Koviloor Digital Library

பேதத்திஞலே அந்தந்தசரீரத்தின் சாக்ஷிஅந்த ந்த விருத்திமாத்திரத்தையே யறியுமென்றுத் தரம்.

௬௩ - வது. சிதாபாசன் விருத்தியுடனே கூடிகடத்தையறிவானென்னில் சிதாபாசன் அ ந்தக்ஷணத்திலே நஷ்டமாகின்றபடியிஞலே க டத்தை அறிவானென்பதுகூடாது விருத்திதா னே யறியவேண்டுமென்கிறசங்கைக்கு.

சிதாபாசனில்லாத விருத்தியும் வெள்ளை மண்போல சடமானபடியினுலுஞ் சிதாபா சனுக்கே கடம்பிரயோசனமானபடியிஞலும் விருத்தியிஞலே யறியப்போகாதென்றுத்தர ம்.

௬௪ - வது. ஆத்துமா விருத்திக்குமுன் அஞ்ஞானத்துக்குச்சாட்சியானபடியிஞலே அ துவே சமாதியாகவேண்டுமென்கிறசங்கைக்கு.

அஞ்ஞானிகள்சாட்சியை அறியாதபடியி ஞலும் அஞ்ஞானமயமான சுழுத்தியும் மீசா ங்தர நியாயம்போல உற்பத்திக்கெல்லாங்கார ணமானபடியிஞலும் அதனைச் சமாதியென்ன க்கூடாதென்றுத்தரம்.

௬௫ - வது. சாட்சிஞ்ஞானத்தையறிந்த ஞானிகளுக்கு விவகாரதசையிலே சிதாபாச னும்விருத்தியுமிருக்கின்றபடியிஞல் அத்துவை

உ. கோவிலூர் மடாலயம்
KOVILOOR MADALAYAM

தங்கூடாதென்கிறசங்கைக்கு,

விருத்தியுஞ் சொப[illegible]மேனும் [illegible]ந்த விரவில்லையென்கிறிடஞ்[illegible]னத்[illegible]அத்துவைதங்கூடுமென்றுத்தரம்.

சசா - வது. சீவனைப்பிரமமென்று சொல்லுதல்உபாசனையென்கிறசங்கைக்கு,

உபாசிக்கின்றதேவதை தனக்கந்நியமான படியினாற் கூடாதென்றுத்தரம்.

சஎ - வது. சீவனைப்பிரமமென்று சொல்லுதல் உபசாரமென்கிறசங்கைக்கு,

தனக்கந்நியனாக விருக்கின்ற புருஷனுக்குப் பிரயோசனநிமித்தியம் உபசாரஞ்சொல்லவேண்டுமேயல்லாமல் தனக்குத்தானுபசாரஞ்சொல்லவேண்டுவதில்லையென்றுத்தரம்.

சஅ - வது. சீவனைப்பிரமமென்று சொல்லுதல் கௌணமென்கிற சங்கைக்கு,

ஒருபுருஷனைப்பார்த்து இவன்சிங்கமென்கிறதுகௌணமேயல்லாமற்சிங்கத்தைச்சிங்கமென்று சொல்லுவது கௌணமல்லவென்றுத்தரம்.

சகூ - வது. சீவனைப்பிரமமென்று சொல்லுதல் குணகுணீபாவமென்கிறசங்கைக்கு.

நீலமும் உற்பலமும் அன்னியோன்னியமாயிருக்கையினாலே கூடும் சீவாத்துமாவுக்குச்

Koviloor Digital Library

சீவத்துவங்கெட்டவுடனே தானேபிரமமாகை யிஞற் த்ண துவித்துவங் கூடாதென்றுத்தரம்.

௫0 - வது. சீவனைப்பிரமமென்று சொல்லுதல் காரணகாரியமென்கிற சங்கைக்கு,

பாலின்காரியமான தயிரைப்போலப்பரிபாகப்படாமல் ஜீவனிடத்திலிருந்தசச்சிதானந்தலட்சணம் ஆவரணத்திஞல் மறைபட்டுஜீவத்துவமாய்பின்புஜீவத்துவம் நீங்கினவுடனே தாஞகவிருக்கின்ற லட்சணம் எப்போதுமுள்ளதாய்ப்பிரகாசிக்கையிஞல்ஆரம்பபரிணமாதிகாரணகாரியங்கள்கூடாதென்றுத்தரம்.

௫௧ - வது. வேதோக்தமாக விருக்கின்ற சீவனும் பரனுமிரண்டாயிருக்கையிஞல் அத்துவைதங் கூடாதென்கின்ற சங்கைக்கு,

பிம்பப்பிரதிபிம்ப திருஷ்டாந்தத்திஞல் அத்துவைதங்கூடுமென்றுத்தரம்.

௫௨ - வது. சீவாத்துமா சரீரசம்பந்தமாய்த் துவம் அகமென்றுவிவகாரம் பண்ணுகையால் கர்த்துருத்வபோக்துருத்துவமுண்டு.பிரபஞ்சமும் நித்தியமென்கிறசங்கைக்கு,

சீவோபாதியிஞற் கர்த்துருத்துவபோக்துருத்துவமுண்டுசீவன்முக்தியில் லோபாதிகப்பிராந்தியிஞல் படிகத்திற்குஉபாதியில்லாததுபோல் ஆத்துமாவுக்குக்கர்த்துருத்துவபோ

Koviloor Digital Library

க்துருத்துவமில்லை பிரபஞ்சமுந் தன்னுடைய விவர்த்தமென்றுத்தரம்.

ருரு - வது. ஆத்துமாசரீரசம்மந்தமாயிருக்கையினாலே நிருபாதியென்பது கூடாதென்கிறசங்கைக்கு,

கடாகாசதிருஷ்டாந்தத்தினாற் கூடுமென்றுத்தரம்.

ருச-வது. காரியமாயிருக்கிறப்பிரபஞ்சத்திற்கு விகாரமுண்டாயிருக்கையினாற்காரணமாயிருக்கின்றபிரமத்துக்கும் விகாரமுண்டென்கிறசங்கைக்கு,

காரியமானசற்பவிகாரங்காரணமாகியபழுதைக்கில்லையென்றுத்தரம்.

ருரு - வது. ஜீவன்முத்தனே பிரமமானால் பூதபவிஷியத்வர்த்தமானமறியாமற்போவானேனென்கிறசங்கைக்கு,

சர்வஞ்ஞயத்துவாதி சாத்துவிகமாயையின்காரியமானபடியினாலே பிரமத்துக்கில்லையென்றுத்தரம்.

ருசா- வது. அஞ்ஞானத்தைஞானம்போக்குமென்னில்அந்தஞானமெதினாற்போகுமென்கிறசங்கைக்கு,

ஞானந்தன்னைத்தவிர வில்லையென்கிறபடியினாலே அதற்குநாசமில்லை யென்றுத்தரம்.

Koviloor Digital Library

௫எ - வது. பிரமஞானிகளுக்குப் பிரபஞ்சம்மேலாபாதிகப்பிராந்திபோலத்தோற்றுமென்னிற் படிகத்தினருகேசிவந்த வர்ணத்தினையுடையபதார்த்தமிருக்கையினாலேலேலாபாதிகப்பிராந்திதோன்றும் ஸ்வஸ்வரூபமாய்த் தன்னைவிடவேறொன்றுமில்லாமலிருக்கின்ற ஆன்மாவுக்குலேலாபாதிகப் பிராந்தியெப்படி கூடுமென்கிறசங்கைக்கு,

கருமசேஷத்தினாற் பிராரத்துவமுண்டென்கிறகற்பனை யிருந்தபடியினாற் கூடுமென்றுத்தரம்.

௫அ - வது. ஆத்துமஞானஞ் சிரவணாதிசாதனங்களினாலே யுண்டாகிறபடியினால்அந்தஞானத்துக்கு உற்பத்தியுண்டானபோதே நாசமுமுண்டல்லவாவென்கிறசங்கைக்கு,

ஞானத்துக்குஉற்பத்தியு நாசமுமில்லை நித்தியமானஞானம் ஆவரணத்தினால் மறைபட்டிருந்தது பின்புசிரவணாதிகளாலே ஆவரணநசிக்கிறபோதுமுன்னிருந்த ஞானம்ஸ்வயமாய்விளங்குகிறபடியினாலே நித்தியமாயிருக்கிற ஞானமே தானென்றறிந்துதன்னைத்தவிர வில்லாதபடியினாலே நாசமில்லையென்றுத்தரம்.

௫௯ - வது. சச்சிதாநந்தந் தனக்குஅன்னியமோ அனன்னியமோவென்கிற சங்கைக்கு,

Koviloor Digital Library

விருத்தின்ஞானத்தினுல் அன்னியம். விருத்தின்ஞானலயத்தினுல் அனன்னியமென்றுத்தரம்.

கூ௰-வது. மாயாஜந்நியமான பஞ்சபூதமும் ஒருதன்மையல்லாமல் வெவ்வேறு குணத்தையடைவானேனென்கிறசங்கைக்கு,

ஆகாசமுதல் பஞ்சபூதத்திற்கும் பிரமம்- பிரகிருதி- ஈசுவரன் - மாயை, விக்ஷேபம் இவ்வைந்தும் நிரையேகாரணமாகையினுற் பூதகுணங்களும் வெவ்வேறென்றுத்தரம்.

கூக - வது.ஆத்துமாவினுடையசன்னிதானத்தில் ஜடரூபமாயிருக்கின்ற மனதுக்குச்சேஷ்டையுண்டென்னில் ஜடரூபமாயிருக்கின்ற கடபடாதிகளுக்குஞ் சேஷ்டையுண்டாகவேண்டுமல்லவாவென்கிறசங்கைக்கு,

காந்தத்தினுடைய ஸன்னிதானத்தில்ஊசிக்குச் சேஷ்டையுண்டேயல்லாமற்கடபடாதிகளுக்குச் சேஷ்டையில்லாததுபோலவென்றுத்தரம்.

கூஉ - வது. ஆகாசஞ்சப்ததன்மாத்திரையையுடையதென்பதற்குப்பிரத்தியக்ஷமெப்படியென்கிறசங்கைக்கு,

பிரதித்துவனியே பிரத்தியக்ஷமென்றுத்தரம்.

Koviloor Digital Library

கூஙு - வது. நிரவயவமாயிருக்கின்ற ஆத்து மாவைவிட்டுச் சீவனுக்குத்தொழிலில்லாதபடி யினாலே சீவனுக்குப்பந்தமில்லையோ வென்கிற சங்கைக்கு,

சீவன் பிரதிபிம்பநியாயனானபடியினாலே பிரித்துப்பார்க்குமிடத்துச் சீவனுக்குப் பந்த மில்லையென்றுத்தரம்.

கூச - வது. சிதாபாசன் பிரதிபிம்பநி யாயனைப் பிரமத்துக்கு அபேதமானாற்பந்த தசையிலே மோக்ஷத்தைவிரும்புவானேனென் கிறசங்கைக்கு,

சூரியப்பிரகாசத்திலேதீபச்சுவாலைலயமா ய்ப்போகிறதுபோல ஆவரணம் நீங்கினகாலத் துப்பிரமத்தினிடத்தில் லயிக்கின்றசீவன்ஆவர ணசஹிதனாய்த் தன்னைவேறென்றுகண்டுமோ க்ஷத்தைவிரும்பினானென்றுத்தரம்.

கூரு-வது. ஒருவன்விருத்திஞ்ஞானம்நஷ் டமாகிசீவன்முத்தியடைந்தால் அவனுக்குச்சக மில்லையல்லவா அப்படி சீவன்முக்தனுக்கில்லா த சகம் மற்றவர்களுக்குத் தோற்றுவானேனெ ன்கிற சங்கைக்கு,

வியஷ்டிவிருத்திஞ்ஞானம் நஷ்டமாய்ச் சமஷ்டி விருத்திஞ் ஞான மிருந்தபடியினால் தோற்றுமென்றுத்தரம்.

Koviloor Digital Library

௬௬ - வது. பிரபஞ்சைதன்னியமாகியும் பிரபஞ்சஞ்சடமாகியு மிருக்கையினாலேஐக்கிய மெப்படியென்கிறசங்கைக்கு,

நாமரூபாத்துமகமான பிரபஞ்சத்திற்கு சொரூபஞ்சத்தாமாத்திரமே யாகையினால்ஐக்கியமென்றுத்தரம்.

௬எ - வது. சத்துநித்தியமென்பதெதினாலென்கிறசங்கைக்கு,

ஞாதுஞ்ஞானத்திற்குச் சாட்சியாகையினாலென்றுத்தரம்.

௬அ - வது. சத்தைப்போல அசத்துப்லக்ஷசமல்லவாவென்கிறசங்கைக்கு,

சத்தில்லாதபடியினால் அசத்துசக்ஷசமல்லவென்றுத்தரம்.

௬௯ - வது. சதாமௌனமென்கிற சொல்லுக்குப்பொருளெதுவென்கிறசங்கைக்கு,

பிரமசாக்ஷாத்காரமென்றுத்தரம்,

எ௰ - வது. ஜீவன்முக்தனுக்குச் ஜீவத்துவம் நஷ்டமானால்நானாரென்கிற சங்கைக்கு,

வஸ்துவொழியவேறில்லையென்றுத்தரம்,

எக - வது. ஜீவன்முக்தஞானிகளொருவனுடைய் கிரகத்திலே போசனஞ் செய்தால் சகத்துக்கெல்லாந் திருப்தியென்ப தெப்படியென்கிற சங்கைக்கு,

Koviloor Digital Library

இவனுடையசரீரம்ஈசுவரசரீரமானபடியி
ஞலென்றுத்தரம்.

எஉ - வது. ஒருமொழியாவதேதென்கிற
சங்கைக்கு,

குருவுபதேசத்திஞலறியவேண்டுமென்
றுத்தரம்.

எரு - வது. மகத்துக்களுக்குக்கருமநிவர்த்
தியெப்படியென்கிற சங்கைக்கு,

பிராரத்துவாந்தத்திற் கைவல்லியம் நிவ
ர்த்திக்கிரமங் கருமாந்தியத்தில் என்றுத்தரம்.

எச-வது. சீவன்முக்தருக்குக்கருமபலமெ
திஞலில்லையென்கிற சங்கைக்கு,

சகலமும் பிரமானந்தமானபடியிஞலெ
ன்றுத்தரம்.

எரு - வது. ஜீவன்முக்தருக்கு மலமெதி
ஞற்போமென்கிறசங்கைக்கு,

வெளிச்சத்தால் இருள் நீங்குகின்றதுபோல
பிரமஞ்ஞானத்திஞலே அது நீங்கிப்போமென்
றுத்தரம்.

எசு -தொடர்ந்திருக்கின்ற ஆகாமியசஞ்
சிதபிராரத்துவங்களுக்கு நாசமெப்படியென்கி
ன்றசங்கைக்கு,

கைவல்லியமில்லாதபடியிஞல்நித்தியமா
யிருக்கும். ஆஞல் ஆசாரியர்கைவல்லியதீக்ஷை

Koviloor Digital Library

பண்ணுங்காலத்து அவருடைய கடாக்ஷவீக்ஷண த்தினாலும் ஞானோபதேசத்தினாலும் போமெ ன்றுத்தரம்.

எஎ - வது. மூயற்சிக்குக் காரணமாயிருக் கின்றவிருத்திஞ்ஞானம்நஷ்டமானால்ஜன்மாந்த ரவிவகாரந்தெரியவேண்டுமல்லவா வென்கிறசங் கைக்கு,

விருத்திஞ்ஞானத்திற்குச்சாக்ஷிஅனாதியா னாலும் எடுத்தஜன்மத்திலே தாம்நடந்த காரிய மாத்திரந்தெரியும் ஜன்மாந்தரவிவகாரம் ஏன றியாதென்றால் அதுயோகத்தினாலுந் தபசினா லும்அறியவேண்டும் இவ்விரண்டும்ஞானத்தை க்குறித்து மித்தையாய்ப்போனபடியினாலறிய வேண்டுவதில்லையென்றுத்தரம்.


எஅ - வது. துவம்பதசோதனைபண்ணினா ல் தத்பதசோதனை யேதுக்கென்கிறசங்கைக்கு,

துவம்பதசோதனைபண்ணினால் சாக்ஷியை யறியலாம். தத்பதசோதனைபண்ணினால் அகண் டமாகியப்பிரமத்தையறியலாமென்றுத்தரம்,

எகூ - வது. சித்விலாசத்தினாற்றோன்று ஞ்சகம் ஜீவன்முக்தனுக்கு நஷ்டமானாற் சித்து நித்தியமாயிருக்கவேண்டுமல்லவாஆரோபமும் அதிஷ்டானமும் போமென்றாற் சூனியமாமெ ன்கிற சங்கைக்கு,

Koviloor Digital Library

ஸ்வபாவஞ்ஞானமொன்றுமேசத்தியமா னபடியினால்ஸ்வரூபத்திற்குஹானியில்லையெ ன்றுத்தரம்.



சங்கற்ப நிராகரணம்

முற்றிற்று.



6434

R65(---)

